# ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பாடு

**ஈ. மகாலெட்சுமி என்ற பூபதி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டமலை, சாத்தூர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13782970

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககாலச் சமுதாயம் தொல்குடிகளால் நிறைந்தது. தொல்குடிகளில் சிறப்பானது பாணர்குடியாகும். பாணர்கள் ஆடல் பாடல்களில் திறமை மிக்கவர்கள். கலைக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள். பாணர்களின் கலைப்பயணத்தை ஆற்றுப்படை இலக்கியங்கள் தெளிவுப்படுத்துகின்றன. வறுமை காரணமாக பல வள்ளல்களை நாடிச்செல்லும் போது ஐந்நில மக்கள் விருந்தோம்பல் செய்துள்ளனர். தமிழர்களின் உயர்ந்த பண்பாடு விருந்தோம்பல் செய்வதாகும். குடிமக்கள் மட்டுமல்லாது வள்ளல்களும் விருந்து செய்து அவர்களை மனம் மகிழச் செய்துள்ளனர். ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவர்களான கரிகாற் பெருவளத்தான், நல்லியக்கோடன் தொண்டைமான், நன்னன்சேய் நன்னன் ஆகியோரின் விருந்தோம்பல் பண்பு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

*உலக அரங்கில் தமிழர்களுக்கென்று தனிப் பண்பாடு உள்ளது. தமிழர்தம் உயர்ந்த பண்பாட்டு நெறிக்கு சான்றாக அமைவது சங்க இலக்கியங்களாகும். செவ்வியல் இலக்கியங்களில் செம்பாதியாக அமைவது ஆற்றுப்படை இலக்கியங்களாகும். ஆற்றுப்படைகளில் விருந்தோம்பல் பண்பு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தின் தொல்குடியான பாண்குடியின் வறுமை நிலையையும், அவர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பரிசில் பெற்ற விதங்களையும் நன்கு விளக்குகிறது. அந்த வகையில் ஆற்றுப்படை நூல்களின் பாட்டுடைத் தலைவர்களையும், அவர்கள் தம் விருந்தோம்பல் பண்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## பாண் சமூகம்

*சங்க காலத் தமிழ்ச்சமூகத்தில் நாடோடி கலைஞர்களாக விளங்கியவர்கள் பாண் சமூகத்தார். பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் பழங்குடிகளாக விளங்கியவர்கள் பாண்மரபினர். இவர்களில் பல பிரிவுகள் உண்டு. அவை பாணர், கோடியர், பொருநர், கூத்தர், வயிரியர், கண்ணுளர், இயவர், கிணைவர், துடியர், கடம்பர், பறையர் அகவுநர், சென்னியர், நகைவர், அகவலன், அகவர், குறுங்கூளியர், கட்டுவிச்சியர் என பல பிரிவுகளில்காணப்படுகின்றனர். தமிழகமக்களின் உயர்ந்த பண்பாட்டைக் குறிப்பிடும் புறநானூறு பழங்காலத்தில் துடியன், பாணன், பறையன், கடம்பன் என நான்குடிகளைக் கொண்டதாகவும், அதைத்தவிர வேறு குடிகள் இல்லை என்றும் குறிப்பிடுகின்றது.*

***துடியன் பாணன் பறையன் கடம்பனென்***
***றிந்நான் கல்லது குடியுமில்லை*** *புறம் 335(7-8)*

*என்ற அடிகள் மூலம் பாண் குடிகள் பெற்ற சிறப்பினை அறிய முடிகிறது.*

## பாணர் - அகராதிகள் விளக்கம்

*பாணர்களுக்கு அகராதிகள் பின்வருமாறு விளக்கம் தருகின்றன.*

## தமிழ் இலக்கிய அகராதி

*பாணர் என்பதற்கு தையற்காரர், பாணர்*

சாதியார், பாட்டுப்பாடி புகழ்பவர், வீணர்[1] ப 280 என்று விளக்கம் தருகிறது.

## தமிழிசைக் கலைக் களஞ்சியம்

பாணர் என்பதற்கு இவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்த இசைக்கலை வாழ்க்கையர்கள். இவர்கள் ஊர் ஊராக சுற்றித் திரிந்து இசைபாடியும், கருவிகளை இசைத்தும், நாடகம் நடத்தியும், நடனம் ஆடிப் பாடியும் வாழ்ந்தவர்கள். பாணர் பெயர் பண் இசையால் பெற்ற பெயர். பணி-இசை, பண்-பாண்-பாண்-அர்-பாணர்[2] ப 278 என்று விளக்கம் தருகிறது.

## பாண்கலைஞர்களின் பெயர்கள்

நிகண்டு எனின் நெடிய சொற்களுக்கு பொருள்தருதல் என்னும் பொருளில் நிகண்டு என்றனர். ஐரோப்பியர் வருகைக்குப் பின் அகராதி பழக்கத்திற்கு வந்தது. அதற்கு முன் மக்கள் பொருள் அறியப் பயன்படுத்தியது நிகண்டுகளாகும். நிகண்டுகள் செய்யுள் வடிவிலேயே இருந்தது.

பிங்கல நிகண்டு பாணர்களின் ஆண்பாற் பெயர்களை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**சென்னியர் வயிரியர் செயிரியர் மதங்கர்**
**இன்னிசை காரர் பாண ரென்ப3**
**பிங் நிக ஆட நூ.எ 90**

சங்க காலத்துப் பாண்மரபில் ஆண்கலைஞர்களைப் போலவே பெண்கலைஞர்களும் உண்டு. ஆண்களில் பலபிரிவினர் கலைத்திறன் அடிப்படையில் இருந்தது போல, பெண்களில் உண்டு. ஆணுக்குப் பெண் சளைத்தவர்கள் அல்ல என்பது போல பெண்பாற்கலைஞர்கள்தங்கள் திறமைகளில் ஆண்களுக்கு இணையாகக் காணப்பட்டனர். பாண்மகளிரின் பெண்பாற் பெயர்களைப் பிங்கல நிகண்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**பாடினி விறலி பாட்டி மதங்கி**
**பாடன் மகடூஉ பாண்மகள் பெயரே[4]**
**பிங் நிக ஆட நூ. எ 92**

பாண்கலைஞர்களில் பெண்கள் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ, பாண்மகளிர் எனப் பலவாறு குறிப்பிடப்பட்டுள்ளனர். மேலும் பாடினி, பாடியர், பாடுமகள், ஆடல் மகள், கிணைமகள், பாட்டி, பாணிச்சி என்னும் பெயர்களிலும் பெண்பாற்கலைஞர்கள் அழைக்கப்பட்டனர்.

## விருந்தோம்பல் பண்பாடு

பண்டைத் தமிழர் பண்பாடு, நாகரிகம் என்பதில் சிறந்து விளங்கினர். உள்ளத்தால் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்களின் தலையாய பண்புகளில் மிகச்சிறந்தவை விருந்தோம்பல் ஆகும். வறியவர்களுக்கும் எளியவர்களுக்கும் இன்முகம் நோக்கி தங்களிடத்தில் இருந்ததை வாரிவழங்கி வந்தனர். மன்னர்கள் மட்டுமல்லாமல் குடிமக்களும் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர். விருந்து என்னும் சொற்குப் புதுமை என்பதே பொருள். எனவே முற்றிலும் புதியவராகத் தம்மிடம் வந்தோரைப் பேணுதலையே விருந்தோம்பல் என்று தமிழர் கருதியமைப் புலப்படும். இவர்கள் இருவகையினர். ஒருவர் நமக்கு அறிமுகமானவர். மற்றவர் நமக்கு அறிமுகம் அற்றவர். முதல்வகையில் உறவினரும் அடங்குவர். இவர்கட்குச் சிறப்பு செய்தல் யார்க்கும் இயல்பு. எனவே அறியார்க்குச் செய்யும் சிறப்பே மேலானது. தொல்காப்பியர் முன்னோர் சென்ற வழியில் செல்லாது புதுமையான யாப்பு வகை கொண்டு பாடுதலை விருந்து எனக் காட்டுகிறார்.

**விருந்து தானே**
**புதுவது கிளந்த யாப்பின் மேற்றே[5]**
**தொல் பொருள் நூ. எ 235**

என்பது தொல்காப்பியர் செய்யுளியல் நூற்பாவாகும்.

இல்லறங்கட்கு முதலாக விளங்கும் விருந்தோம்பலை வள்ளுவர்

**இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு[6] குறள் எ 81**

எனச் சிறப்பிக்கிறார்.

கண்ணகியை விட்டுப் பிரிந்த கோவலன் மறுபடியும் அவளோடு சேரும்போது கோவலன் தன்னோடு இல்லாததை விட தான்

*விருந்தினர்களை உபசரிக்க முடியாத நிலையை நினைத்தே பெரிதும் வருந்துகிறாள் என்பதை,*

***அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்***
***துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை நும்[7]***
***சிலம்பு கொலைக்களக்காதை ப 288***

*என இளங்கோவடிகள் விளக்குகிறார். இதன் மூலம் விருந்தோம்பல் பண்பை அறிய முடிகிறது.*

## விருந்தை ஏற்றோர்

*பண்டைத் தமிழகம் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களாலும், குறுநில மன்னர் பலராலும் ஆட்சி செய்யப்பட்டது. அவ்வரசர்களும் மக்களும் விருந்தோம்பலைக் கடமையாகக் கொண்டிருந்தனர். பரிசில் பெற வந்தோர் பாணர், கூத்தர், பொருநர் என்னும் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் வாழ்வாதாரத்திற்காக மன்னர், மக்கள் மனமுவந்து தரும் விருந்தை மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்களே விருந்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஆவர்.*

## புரவலர் - இரவலர் உறவு

*பாணர்தாம் பரிசில் பெறத் தேடிச்சென்ற மன்னர்களின் கொடை, வீரம் மற்றும் வெற்றிச் சிறப்புகளைப் புகழ்ந்து பாடுவர். அதைக் காணும் வள்ளல்கள் மிகவும் மகிழ்ச்சியுற்று அவர்களை இன்முகத்தோடு வரவேற்று, உபசரித்து, தங்கள் இல்லங்களில் தங்கவைப்பதோடு அவர்கள் இருப்பிடத்திற்குச் செல்லும்போது அவர்களுக்கு வேண்டிய அளவு பரிசில்கொடுத்து அனுப்பியுள்ளனர். மன்னர்கள் பாணர்களை நட்புமுறையில் உபசரித்துள்ளனர். அவர்கள் வறுமை களைந்து வளமையோடு வாழ உதவி செய்துள்ளனர். புறநானூற்றுப்பாடல்களில் மன்னர் புலவர் நட்பு நிலையை விளங்கிக் கொள்ள முடிகிறது. அதேபோல் பாணர் - மன்னர் உறவு நிலைகளை ஆற்றுப்படை நூல்வழி அறிய முடிகிறது.*

## கரிகாற்பெருவளத்தானின் விருதந்தோம்பும் முறை

*பொருநராற்றுப்படையின்பாட்டுடைத்தலைவனான கரிகாற்பெருவளத்தானின் விருந்தோம்பல் சிறப்பினை முடத்தாமக்கண்ணியார் பொருநன் வாயிலாக விளக்குகிறார். பொருநனைக் கண்ட கரிகாலன் வரவேற்கிறான். கண்ணில் படும்படியாகப் பக்கத்தில் வைத்துக் கொள்கிறான். அன்பால் அள்ளிப் பருகுபவன் போல் கனிவோடு பார்க்கிறான். அப்பார்வை பொருநனின் உள்ளத்தை அன்றி எலும்பும் கிளர்ச்சி கொள்ளும்படியாக அமைவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.*

*ஈரும்பேனும் நிறைந்த, வேர்வையால் நனைந்த, நைந்து போயிருந்த ஆடையை அகற்றி, இழைபோன வழிஎது என்று அறிய முடியாத வகையில் நுட்பமாக நெய்யப்பட்டிருந்த பாம்பின் தோலை ஒத்திருந்த புதுபட்டாடைக் கொடுத்து உபசரித்தான். ஏவல் மகளிர், பொன்னாற் செய்த வட்டில் நிறையும்படி வருத்தம் நீங்க கள்ளினை உண்ணக் கொடுத்துள்ளனர். பின்பு அறுகம்புல் பழுதையைத் தின்று கொழுத்த செம்மறியாட்டின் பருத்த மேல்தொடையின் வெந்த இறைச்சி, இரும்பு நாராசத்தில் கோத்துச் சுடப்பட்ட கொழுத்த இறைச்சியாகிய பசிய தசைத் துண்டத்தினை உண்ணும்படியாகக் கொடுத்தான். தெவிட்டிப் போகும்அளவிற்குக் கொடுத்தான். வெறுத்துப் போகும் அளவிற்கு உபசரித்தான். இனிய சுவையுடைய பல்வேறு தின்பண்டங்களைக் கொடுத்தான். மேலும் முல்லை முகை போன்று வரியற்ற இடைமுரியாத அரிசியால், விரல் போன்று நெடுகின் அளபொத்த சோற்றினையும், அவற்றோடு பருக்கைக் கற்கள் போன்று நன்கு பொரிக்கப்பட்ட பொரிக்கறிகளையும் பிறவற்றையும் கழுத்து வரையில் வந்து நிரம்புமாறு உண்ணச் செய்து விருந்து செய்துள்ளதாகப் பொருநன் குறிப்பிடுவதாகப்*

பொருநராற்றுப்படை விளக்குகிறது. இதன் மூலம் கரிகாற்பெருவளத்தானின் விருந்தோம்பல் பன்பு நன்கு வெளிப்படுகிறது.

## நல்லியக்கோடனின் விருந்தோம்பல்

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் ஒய்மாநாட்டை ஆண்ட நல்லியக் கோடன் என்ற மன்னன். நல்லியக்கோடன் அறிஞர், வாயவர், அரிவையர் பரிசிலர் எனப் பலராலும் பாராட்டப்பட்டவன். அதற்குக் காரணம் அவனிடம் அமைந்த குணங்களே. செய்நன்றியறிதல் அறங்களுள் தலைசிறந்த அறம். ஆதலின் அவ்வள்ளளின் புகழுக்கு அதனை மணிமுடியாக வைக்கின்றார் ஆசிரியர்.

சிற்றினம் சேராமைப் பண்புடையவனாக நல்லியக்கோடன் விளங்குகிறான். சிற்றினஞ் சேர்தல் எத்தகைய பெருமையையும் அழித்து விடும். அதனை நன்கு அறிந்த அவ்வள்ளல் அத்தகைய குற்றமில்லாத உயர்ந்த பண்புடையவனாகக் குறிப்பிடப்படுகின்றான்.

இன்முகமுடைமை வேந்தர்க்கும் வள்ளலுக்கும் இன்றியமையாத பண்பு, அத்தகைய பண்பைப் பெற்றவன் நல்லியக்கோடன். வீரம் நிறைந்த வள்ளல், வீரரே போற்றும் மாண்புடையவன். பகை மறவர் பல்லாயிரம் பேரிடத்தும் தனி ஒருவனாய் நின்று போர் புரியும் ஆற்றல் உடையவன் என நல்லியக்கோடனின் பண்புகள் விளக்கப்படுகின்றன.

ஒய்மாநாட்டை அண்ட சிற்றரசன் நல்லியக்கோடன் இரவலர்களின் நிலையைக் கண்டு வருந்தும் ஈர நெஞ்சம் கொண்டவன். தன்னை நாடி வரும் இரவலருக்கு மூங்கிலை உரித்து எடுத்தது போன்ற மெல்லிய ஆடையை உடுத்தத் தருவான். பாம்பின் விசம்போல் மயக்கம் தலைக்கேறும்படியாக இனிய கள்ளைக் குடிக்கத் தருவான். முன்னொரு காலத்தில் வில்லுக்கெனப் புகழப்பட்ட அர்ச்சுனனின் மூத்தோனாகிய வீமன் சமையல் நூல் ஒன்றை எழுதியுள்ளான். அந்நூலில் கூறப்படாத பல்வகை உணவுகளையும் ஆக்கித் தருவான். அவற்றைப் பொன்னாலாகிய பாத்திரத்தில் இட்டு ஊட்டும் கருணை கொண்டவன். இச்செய்தியினை நல்லூர்நத்தத்தனார்

*மாசில்*
***காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ***
***பாம்பு வெகுண் டன்ன தேறல் நல்கி***
***காஎரி ஊட்டிய கவர்களைத் தூணிப்***
***பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்***
***பணிவரை மார்பன் பயந்த நுண்பொருள்***
***பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்***

***சிறுபாண் பா.வ 112-113***

என அவன் வள்ளல் தன்மையைக் குறிப்பிடுகின்றார்.

## தொண்டைமானின் விருந்தோம்பல்

நிலையில்லா இவ்வுலகத்தில் நிலைக்கும் புகழை விரும்புபவன் தொண்டைமான். அவனைப் பாடிப் பரிசில் பெற வந்த பெரும்பாணனைத் தொண்டைமான் தன் பக்கம் விரும்பி அழைப்பான். பாணன் இடையில் கட்டியிருக்கும் பாசிவேரைப் போன்ற கந்தலாடையை நீக்குவான் தன் செல்வச்சுற்றத்தோடு சேர்ந்திருக்கும் வண்ணம் பாலாவி போன்ற நூலால் நெய்யப்பட்ட ஆடையை உடுத்தத் தருவான். சிறந்த சமையல்காரனால் செய்யப்பட்ட சமையலில் காணப்படும் இறைச்சியைக் கொழுப்பும் சதையுமாக அள்ளித் தருவான். செந்நெல்லால் ஆக்கிய சோற்றுடன் தருவான். அமிழ்தத்தை ஒத்த பிற உணவுகளையும் தாமே அருகிலிருந்து ஊட்டுவான் எனத் தொண்டைமானின் விருந்தோம்பலைக் கடியலா உருத்திரங்கண்ணனார் எடுத்துரைக்கிறார்.

## நன்னன் சேய் நன்னன் விருந்தோம்பல்

நவிரமலையை ஆட்சி செய்தவன் நன்னன்சேய் நன்னன். இவன் தன்னை நாடி வந்த இரவலர்களைப் போற்றுவதில் சிறந்து விளங்கினான். இழை போன்ற இடம் பிறருக்குத் தெரியாத வகையில் அமைந்த நுண்ணிய ஆடைகளைக் கொடுத்துக் கூத்தரை

*உடுத்த கொண்டு வரப்பட்ட விலங்குகளின் கொழுப்பையும்தசையையும் வெண்மையான நெல்லின் சோற்றோடு கலந்து தருவான். முதல் நாள் போன்ற விருப்பத்துடன் தங்கும் நாள்வரை இனியமுகம் காட்டி உபசரிப்பான் என்பதைப் பெருங்கொளசிகனார் சிறப்புற எடுத்துக்காட்டுகிறார்.*

***எள் அறு சிறப்பின் வெள் அரைக் கொளீஇ***
***முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு***
***நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது***
***தலைநாள் அன்ன புகலொடு, வழி சிறந்து***
***மலைபடு பா.வ 562-566***

*என்ற அடிகள் விளக்குகிறது.*

**முடிவுரை**

*சங்ககால மக்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர் என்பதை அறிய முடிகிறது. தொல்குடியான பாண்சமூகத்தில் கலைகளின் அடிப்படையில் பல பிரிவுகள் இருந்தமை புலனாகிறது. வறுமையின் காரணமாக பல மைல்கள் கால்நடையாகவே நடந்து சென்றது தெளிவாகிறது. பாணர்களுக்கும் வள்ளல்களுக்கும் நல்ல உறவுமுறை இருந்தது புலனாகிறது. ஆற்றுப்படை நூல்களின் பாட்டுடைத்தலைவர்கள் உயர்ந்த ஆடைகள், சிறந்த உணவுகள், விலையுயர்ந்த பரிசுப்பொருட்கள் கொடுத்து அவர்களை வழியனுப்பி வைத்த விதங்களைப் பார்க்கும்போது அவ்வள்ளல்களின் சிறந்த விருந்தோம்பல் பண்பு விளங்குகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *கண்ணப்ப முதலியார், 1957, தமிழ் இலக்கிய அகராதி, செண்ட்ரல் புக் டிப்போ திருவல்லிக்கேணி, சென்னை.*
2. *சுந்தரம். வீ.பா.க, 2006, தமிழிசைக் கலைக்களஞ்சியம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
3. *பிங்கல முனிவர், 1917, பிங்கல நிகண்டு, மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை.*
4. *சுபாஷ் சந்திரபோஸ், 2016, தொல்காப்பியம் பொருளதிகாரம், தெற்கலங்கம் தஞ்சாவூர்.*
5. *வளன் அரசு பா, சூர்யா பதிப்பகம், திருநெல்வேலி.*
6. *புலியூர்கேசியன், 2011 சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.*